# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 208 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 210 |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


207- B 81563 - 353 (2019/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட கொடைப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

இலங்கை மகாவலி அதிகார சபையின் பொலன்நறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேசச் செயலாளர் பிரிவில், சீ வலயத்தின் வதிவிடக் கருத்திட்ட முகாமையாளரான கே. ஏ. சீ. விமல் குமார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2009.08.07 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் பொ/சி/சிரி/பிர/ 16237 (மேட்டு நிலம்) ஐ உடைய கொடைப் பத்திரத்தின் உரிமையாளரான சிரிபுர, ஜீவத்புர, இலக்கம் 248 இல் வசிக்கும் அஹுகொட நயதெலாகே சோமபாலவுக்குக் கையளிக்கப்பட்டு பொலன்நறுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 6/8/6/168 இன் கீழ் 2009.01.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளரா வதற்குச் சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இல்லாததால் அல்லது சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ்வழங்கல் பத்திரத்தை மேற்குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அதனை 2019.10.11 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

### அட்டவணை

பொலன்நறுவை நிருவாக மாவட்டத்தின், திம்புலாகல பிரதேசச் செயலாளர் பிரிவின் எகொட பத்துவை கோரளையில் மீவத்புர கிராம அலுவலர் பிரிவின், மீவத்புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்திடம் உள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் - ஐ உடைய வரைபடத்தின் - இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் உப. பிர. 13 மேலதிகம் 323 ஐ உடைய துண்டம் பிரிக்கும் வரைபடத்தின் - இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - ஐ உடைய வரைபடத்தின் இலக்கம் 3842 ஐ உடைய காணித்துண்டமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதும், விஸ்தீரணத்தில் 0.193 ஏக்கர்/ஹெக்டயார் - அளவுள்ளதும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப் பட்டது மான அரச காணி -

வடக்கு : 3841, 3846 மற்றும் 3845 ஐ உடைய காணித் துண்டங்கள் ;
கிழக்கு : 3846, 3845 மற்றும் 3843 ஐ உடைய காணித் துண்டங்கள் ;
தெற்கு : 3843, 3879 மற்றும் 3845 ஐ உடைய காணித் துண்டங்கள் ;
மேற்கு : 3879 மற்றும் 3841 ஐ உடைய காணித் துண்டங்கள்.

கே. ஏ. சீ. விமல் குமார,
வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர்,
சீ வலயம்,
தெஹி அத்தகண்டிய.

2019, ஒகத்து 07.

09- 829/1

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட கொடைப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

இலங்கை மகாவலி அதிகார சபையின் பொலன்நறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேசச் செயலாளர் பிரிவில், சீ வலயத்தின் வதிவிடக் கருத்திட்ட முகாமையாளரான கே. ஏ. சீ. விமல் குமார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2009.08.07 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் பொ/சி/சிரி/பிர/ 16238 (வயல் நிலம்) ஐ உடைய கொடைப் பத்திரத்தின் உரிமையாளரான சிரிபுர, ஜீவத்புர, இலக்கம் 248 இல் வசிக்கும் அஹுகொட நயதெலாகே சோமபாலவுக்குக் கையளிக்கப்பட்டு பொலன்நறுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 6/8/6/169 இன் கீழ் 2009.01.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமை யாளராவதற்குச் சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இல்லாததால் அல்லது சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ்வழங்கல் பத்திரத்தை மேற்குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அதனை 2019.10.11 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

### அட்டவணை

பொலன்நறுவை நிருவாக மாவட்டத்தின், திம்புலாகல பிரதேசச் செயலாளர் பிரிவின் எகொட பத்துவை கோரளையில் மீவத்புர கிராம அலுவலர் பிரிவின், மீவத்புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகம் இடம் உள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் - ஐ உடைய வரைபடத்தின் - இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் உப. பிர. 13 மேலதிகம் 354 ஐ உடைய துண்டம் பிரிக்கும் வரைபடத்தின் - இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - ஐ உடைய வரைபடத்தின் இலக்கம் 6269 ஐ உடைய காணித்துண்டமாகச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளதும், விஸ்தீரணத்தில் 1.067 ஏக்கர்/ஹெக்டயார் - பேர்ச்சஸ் அளவுள்ளதும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப் படுத்தப்பட்டதுமான அரச காணி -

வடக்கு : 6268 ஐ உடைய காணித் துண்டம் ;
கிழக்கு : 6273 மற்றும் 6268 ஐ உடைய காணித் துண்டங்கள் ;
தெற்கு : 6273 மற்றும் 6270 ஐ உடைய காணித் துண்டங்கள் ;
மேற்கு : 6270 மற்றும் 9298 ஐ உடைய காணித் துண்டங்கள்.

கே. ஏ. சீ. விமல் குமார,
வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர்,
சீ வலயம்,
தெஹி அத்தகண்டிய.

2019, ஒகத்து 07.

09- 829/2

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவிற்கேற்ப 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி லுனுகம்வெஹர இல் வசிக்கும் குணவர்தன முதியன்சலாகே மானல் பத்திரனகே என்பவருக்கு ஹம்/ 11/ pra/ 52730 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு லுனுகம்வெஹர மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 2005.03.31 ஆந் திகதி 104 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/ இருக்கும் பின்னுரிமை வாரிசு உரிமை கோர விரும்பவில்லை, என தென் மாகாண சபைக்குட்பட்ட லுனுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிரியதர்சினி ரணசிங்ஹ ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2019.11.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் - அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து - என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட - இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 177 எனக் காட்டப்பட்டுள்ளதும், அம்பாந்தோட்ட நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட லுனுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மாகம் பற்று/கோரளை யிலுள்ள கரபாவெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குடா கமம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 00ஏக்கர் 02 றூட் 00 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு : -

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 172 மற்றும் 173;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 178 ;
தெற்கு : உள்வீதி ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 176.

என். டி. பீ. ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
லுனுகம்வெஹர.

2018.10.19.

09- 854/1

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஹம்/ 12/ ப்ர/ 31135 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு சந்துன்கம எனுமிடத்தில் வசிக்கும் சதரசிங்கசே தியோனிச் அப்புகாமி என்பவருக்கு 1996.01.23 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் ஹம்பாந்தோட்டை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் ஹம்/267/2657/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1996/06/24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பற்று நிலத்திற்குச் சட்டமுறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், தென் மாகாண சபையின் திஸ்ஸமகாராம செயலாளர் தொடம்பகல லொகு யத்தெகிகே காலிங்க ப்ரியவங்ஷ ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2019.11.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

### அட்டவணை

அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் திஸ்ஸமகாராம பிரதேசச் செயலாளர் பிரிவின் சந்துன்கம கிராம அலுவலரின் பகுதியில் உள்ள சந்துன்கம கிராமத்தில் அமைந்துள்ளதும், .................... மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையியல் அதிகார சபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள ........... இலக்க வரைபடத்தில் ................. ஆம் இலக்க துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான ........... அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு:
வடக்கு : வழி ;
கிழக்கு : பேமதாசவின் இடம் ;
தெற்கு : சிறிபாலவின் இடம் ;
மேற்கு : குணபாலவின் இடம்.

டி. எல். கே. பிரியவங்ஷ,
பிரதேச செயலாளர்,
திஸ்ஸமகாராம.

திகதி : 2019.07.23

09- 854/2

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி இல. 364, கம்மான 02, தக்குண இவர, லுனுகம்வெகரயில் வசிக்கும் கொன்டாரம்கே சார்லிஸ் அப்புகாமி என்பவருக்கு ஹம்/ 11/ ப்ர/ 26649 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு தங்கல்ல மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1998.06.16 ஆந் திகதி ஹம்/95/1558/ 98 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என தென் மாகாண சபைக்குட்பட்ட லுனுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இந்திக றுவன் குமார பத்திரன ஆகிய நான், இத்தால் அறியத் தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2019.11.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் எப்.ரிபி.03 அவர்களினால் தயாரிக்கப்பட்ட 01 இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து அரச நில அளவையாளரினால் நிர்மாணிக்கப்பட்ட சிம் 830004 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 118 எனக் காட்டப்பட்டுள்ளதும், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட லுனுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மாகம் பற்று/ கோரளையிலுள்ள தக்குண இவர, குடாகம்மான 02 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கெந்தகஸ்மங்கட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், 0.2025 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு :

வடக்கு : காணி துண்டு இலக்கம் 119;
கிழக்கு : காணி துண்டு இலக்கம் 109 மற்றும் அரச காணி;
தெற்கு : காணி துண்டு இலக்கம் 117 ;
மேற்கு : காணி துண்டு இலக்கம் 127 பிரதான வீதி.

ஐ. எல். விக்கிரமநாயக்க,
பிரதேச செயலாளர்,
லுனுகம்வெகர.

திகதி : 2019.06.04

09- 854/3

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/22087 (xxii).
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- சிபிசி/எல்சி/எல்டி/4/1/4/554.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 691, குண்டசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குண்டசாலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபி மஹ 5253 எனும் வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 06 என காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0524 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி சுமந்தி தில்ருக்சிகா நாகஹதென்ன என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : மு. கி. மஹ 5162 இல் காது இல. 08 ;
கிழக்கு : 7;
தெற்கு : 17, 18 ;
மேற்கு : 4, 5.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.08.08 தொடக்கம் 30 வருடங்கள் முன்நோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1994 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப் படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஈ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(உ) 2019.08.08 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், குடும்பத்தினுள் அல்லது இந்தக்காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது மாற்றம் செய்தல் தவிர்ந்த, வேறு எவ்வித கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப்படமாட்டாது ;

(ஊ) பிரதேசச் செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்.

(எ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப் படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப் பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமைமாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. அயோத்யா எஸ். ஜயவர்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 27.

9-801

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. :4/10/41998
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LB/LS/BAT/MSE/03

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களவாஞ்சிக்குடி வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த களவாஞ்சிக்குடி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 03 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய, வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டுத் கணபதிப்பிள்ளை மாணிக்கப்பொடி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : பாதை (பி.ச) ;
தெற்கு : அரச காணி ;
மேற்கு : பாதை (பி.ச)

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2019.07.08 ஆந் திகதியிலிருந்து 2049.07.07 வரை)

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தை சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங் களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- தவணைப்பம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய, வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) 2019.07.08 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப் படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 27.

09-984

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.